

# குழந்தையரின் நலன்களுக்காகப் பெற்றோர் கடைப்பிடிக்க வேண்டியவை!



அன்புடைய பெற்றோரே வணக்கம்!

தமிழக அரசு கொண்டு வந்துள்ள சிறப்பு மிக்க புதிய பாடப்புத்தகங்களைக் கூடுதலாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு காணொளியில் காண விருப்பம் ஏற்படின் வீட்டில் இணையதளத்துடன் கூடிய கணினியிலோ அல்லது கைப்பேசியிலோ குழந்தையர் கற்கலாம். இணையதளத்தில் கற்கும் பாடப்பொருளைத் தவிர பிறவற்றைக் குழந்தையர் பார்க்க தயவு கூர்ந்து அனுமதிக்க வேண்டாம்.

குழந்தையர் வீட்டில் இருக்கும் போது தொலைக்காட்சியில் செய்தி மற்றும் பயனுள்ள நிகழ்ச்சிகள் மட்டும் குழந்தையருடன் பார்க்க வேண்டுகிறோம். பிற நிகழ்ச்சிகளைப் பார்க்க குழந்தையரைத் தயவு கூர்ந்து அனுமதிக்க வேண்டாம்.

குழந்தையர் வீட்டுப் பாடத்தைப் படிக்கும்போது நீவிரும் துணையாக நின்று கூடுதல் கவனம் செலுத்த வேண்டுகிறோம். குழந்தையர் ஆழ்ந்த அறிவைப் பெற தினமும் செய்தித்தாள் மற்றும் சிறந்த புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டுகிறோம்.

குழந்தையருடன் நீவிர் அதிக நேரம் உரையாடி மகிழ்வதுடன் அவரின் தனித்திறமையை அறிந்து அதனை மேம்படுத்த வேண்டுகிறோம். குழந்தையர்க்கிடையே தன்னம்பிக்கையை வளர்க்கும் வண்ணம் அவரை அவ்வப்போது பாராட்டி ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

குழந்தையர்க்குள் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளைக் கண்டறிந்து அந்த ஏற்றத்தாழ்வுகளைச் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை அவர்க்குக் கற்றுக் கொடுக்க வேண்டுகிறோம்.

குழந்தையர் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழக் கற்றுக்கொடுக்க வேண்டுகிறோம்.

குழந்தையர் தேர்வுக்குத் தயாராகும் காலங்களில் ஆதரவான பேச்சு, அன்பான கவனிப்பு, தேவையான ஆலோசனை போன்றவற்றை வழங்க வேண்டுகிறோம்.

குழந்தையர்க்கு விடுமுறை நாட்களில் நீதிக்கதைகள் சொல்லுதல், நூலகம் அழைத்துச் செல்லுதல், உடல் ஆரோக்கியம் தரும் விளையாட்டுகளில் பங்குபெறச் செய்ய வேண்டுகிறோம்.

மேலும் குழந்தையர்க்காகச் சேமிக்கவும் அவர்க்கு சேமிக்கும் பழக்கத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டுகிறோம்.

உங்கள் குழந்தையரின் வாழ்க்கை சிறப்புற அமைய மேற்கண்ட ஆலோசனைகளை வழங்கி மகிழும்.....



ஆக்கம் & வெளியீடு:

முனைவர். **த.முத்துக்குமரன்** தாளாளர்,

அன்னை தெரசா மெட்ரிகுலேசன் பள்ளி,

& நர்சிங் கல்லூரி, ஜெயங்கொண்டம்,

அரியலூர் மாவட்டம் - 621 802.

போன்: **04331 - 251677,** செல்: **9865114777.**